யா/ ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.
J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை – 2020 – தரம் 8
First Term Examination – 2020 – Grade 8

கத்தோலிக்கத் திருமறை I, II Catholicism I, II	15	T	I, II	இரண்டு மணித்தியாலம் Two Hours

சுட்டெண் Index No

கிறிஸ்தவம்

பகுதி I

மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க

01. உலகத்தின் படைப்புக்களில் உன்னத படைப்பு
1. ஆகாயம் 2. ஒளி 3. விலங்குகள் 4. மனிதன்

02. இஸ்ராயேலர் பார்வோன் அரசனிடம் அடிமையாக்கப்பட்டது
1. 430 ஆண்டு 2. 530 ஆண்டு 3. 630 ஆண்டு 4. 730 ஆண்டு

03. ஆண்டவர் பகலில் மக்களுக்கு வழிகாட்டியது.
1. நெருப்புத்தூண் 2. மேகத்தூண் 3. வானவில் 4. சந்திரன்

04. இஸ்ராயேலருக்கு இறைவன் கொடுத்த உணவு
1. இறைச்சி 2. திராட்சை 3. மன்னா 4. மீன்

05. இஸ்ராயேலரின் கானான் நாட்டுப் பயணத்தை கூறும் நூல்
1. விடுதலைப் பயணம் 3. லேவியர்
2. எண்ணிக்கை 4. தொடக்க நூல்

06. இயேசு எம்மை அழைத்துச் செல்லும் மேய்ச்சல் நிலம்.
1. வயல் 2. புற்றரை 3. இறையரசு 4. பாலைவனம்

07. மண்ணினால் உருவாக்கப்பட்ட மனிதன் கடவுளிடமிருந்து பெற்றது.
1. அன்பு 2. உயிர்மூச்சு 3. இரக்கம் 4. விடுதலை

08. இயேசு லேவியை அழைத்த இடம்.
1. ஆலயம் 2. செபக்கூடம் 3. கடற்கரை 4. சுங்கச்சாவடி

09. ததேயு என அழைக்கப்பட்ட திருத்தூதர்.
1. மத்தேயு 2. தோமா 3. சீமோன் 4. யூதா

10. "ஜெபத்தின் ஆசிரியர்" என்ற பட்டம் பெற்ற பெண் நற்செய்திப் பணியாளர்.
1. ஜொஜிஸ் த சில்வா 3. யுபிரேசியா
2. மரியம் 4. எலிசா எக்னிக்

11. "இயேசுவின் அன்பு என்ற பாடலை இயற்றி இசையமைத்தவர்."
1. ஜொஜிஸ் த சில்வா 3. யுபிரேசியா
2. மரியம் 4. எலிசா எக்னிக்

12. இயேசு இவ்வுலகில் அழைக்க வந்தது
1. நேர்மையாளர்களை 3. பரிசேயரை
2. பாவிகளை 4. சதுசேயரை

13. இஸ்ராயேலருக்கு கடவுள் கொடுத்த கட்டளைகள்.
1. 3 2. 6 3. 10 4. 2

www.lkedu.lk

14. பாலைவனப் பயணத்தில் மாலையில் கூடாரங்களை மூடிக்கொண்டது

1. புறா 2. தீக்கோழி 3. கொக்கு 4. காடை

15. மனித வாழ்வு என்றுமே

1. நிலையானது 3. நிலையற்றது
2. மனிதருக்குரியது 4. வசதியானது

16. சீமோன் பேதுரு செய்து வந்த தொழில்

1. மீனவத் தொழில் 3. தோல் தைத்தல்
2. விவசாயம் 4. தச்சுத் தொழில்

17. உலகப் படைப்பு தொடக்க நூலில் கூறப்படுவது.

1. ஒருமுறை 2. இருமுறை 3. மும்முறை 4. நான்கு முறை

18. மனிதன் படைப்புக்களின்

1. உரிமையாளன் 2. ஆட்சியாளன் 3. பொறுப்பாளன் 4. துணையாளன்

19. ஆண்டவராகிய கடவுள் தோட்டம் அமைத்தது.

1. ஏதேனில் 2. பெத்தலில் 3. சிக்கேமில் 4. ஆரானில்

20. மனிதன் சரீர ரீதியில் மரணித்து திரும்புவது

1. விண்ணுக்கு 2. மண்ணுக்கு 3. ஆலயத்திற்கு 4. வீட்டிற்கு

$(\mathbf{20 \times 2 = 40})$

பகுதி II

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

01.

1. கடவுள் மனிதனை எத்தகைய தன்மையில் படைத்தார்?
2. உன்னத படைப்பான மனிதனுக்கு கடவுள் கொடுத்த பணிகள் 2 தருக.
3. படைப்பை பொறுத்தமட்டில் உமது கடமைகள் 6 தருக.

$(3 + 3 + 6 = 12)$

02.

1. கடவுள் ஆதிப்பெற்றோருக்கு அளித்த நன்மைத்தனங்கள் 2 தருக.
2. மரணம் எவ்வாறு மனிதனுக்குள் நுழைந்தது?
3. கடவுள் மனிதனுக்குக் கொடுத்த தண்டனைகள் யாவை?

$(3 + 3 + 6 = 12)$

03.

1. இஸ்ராயேல் மக்கள் எத்தகைய துன்பங்களை அனுபவித்தார்கள்?
2. இஸ்ராயேல் மக்களது விடுதலைப்பயணம் எவ்வாறு இருந்தது?
3. இஸ்ராயேலருக்கு கிடைத்த இறைவனது பராமரிப்பை உதாரணங்களுடன் விளக்குக.

$(3 + 3 + 6 = 12)$

04.

1. ஆயன் என்ற பதத்தின் அர்த்தம் யாது?
2. நல்ல ஆயனின் பண்புகள் எவை?
3. காணாமல் போன ஆட்டின் உவமையை எழுதி விளக்குக

$(3 + 3 + 6 = 12)$

05. பின்வருவனவற்றில் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. உன்னத படைப்பான மனிதன் 3. இயேசுவின் குழந்தைப் பருவம்
2. வாழ்வுக்கு வழிகாட்டும் இறைவார்த்தை 4. சிலுவையில் இயேசுவின் தியாகப் பலி

$(\mathbf{6 + 6 = 12})$

www.ked.lk